அனுப்புநர்

முனைவர்.சி..உஷாராணி,M.Sc., B.Ed., Ph.D.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

செய்தி ஆசிரியர்,
அனைத்து ஊடகங்கள்

ந.க.எண். 020625 / பி1 / 2020 நாள் : 27.10.2020

ஐயா / அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – செப்டம்பர் / அக்டோபர் 2020, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வுகள் – தேர்வு முடிவுகள் வெளியிடுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

செப்டம்பர்/அக்டோபர் 2020 மாதத்தில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வுகள் முடிவுகளை தேர்வர்கள் மதிப்பெண் பட்டியல்களாகவே (Statement of Marks) பதிவிறக்கம் செய்துக் கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்து செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பினை தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது செய்திக்குறிப்பு மட்டும். விளம்பரம் அல்ல.

ஒம்./–
இயக்குநர்

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

<u>நகல்</u> :

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்உதவி இயக்குநர்கள்.

# அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை–600 006

## செப்டம்பர்/அக்டோபர் 2020

## பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வுகளின் முடிவுகளை மதிப்பெண் பட்டியல்களாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்த செய்திக்குறிப்பு

செப்டம்பர்/அக்டோபர் 2020 மாதத்தில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வுகளை எழுதிய தேர்வர்கள் தங்களது தேர்வு முடிவினை மதிப்பெண் பட்டியலாகவே (statement of mark sheet), பின்வரும் நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Result என்பதனை Click செய்து, Hr.Sec and SSLC - 2019-20 Result எனத் தோன்றும் வாசகத்தினை Click செய்து, கீழ்க்காணும் Link–ல் தங்களது தேர்வெண் (Roll Number) மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து, பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

| வ.எண். | தேர்வு | தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் நாள் | **Web site link for downloading Statement of Marks** |
|---|---|---|---|
| 1. | பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு | **28.10.2020 (புதன் கிழமை) காலை 11.00 மணி** | Sep 2020, SSLC Suppl. Exam - Result |
| 2. | மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு | **28.10.2020 (புதன் கிழமை) பிற்பகல் 02.00 மணி** | Sep 2020, HSE Second Year Suppl. Exam – Result |
| 3. | மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு | **29.10.2020 (வியாழக் கிழமை) காலை 11.00 மணி** | Sep 2020, HSE First Year Suppl. Exam – Result |

**விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

செப்டம்பர்/அக்டோபர் 2020, பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கான மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு **03.11.2020 (செவ்வாய்க் கிழமை) மற்றும் 04.11.2020 (புதன் கிழமை)** ஆகிய இரண்டு நாட்களில் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்.

**<u>பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கான மறுகூட்டல் (Retotalling) கட்டணம்</u>**

| | | |
|---|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.205/– |

**<u>மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுகளுக்கு விடைத்தாளின் நகல் (Scan copy of the answer script) பெறுவதற்கான கட்டணம்:</u>**

| | | |
|---|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.275/– |

**<u>மறுகூட்டலுக்கான (Retotalling) கட்டணம்</u>**

| | | |
|---|---|---|
| உயிரியல் பாடத்திற்கு மட்டும் | – | ரூ.305/– |
| ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.205/– |

மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தேர்வர்கள் தங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவையா அல்லது மதிப்பெண் மறுகூட்டல் செய்ய வேண்டுமா என்பதை முன்னரே தெளிவாக முடிவு செய்து கொண்டு அதன் பின்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விடைத்தாளின் நகல் பெற்றவர்கள் மட்டுமே விடைத்தாள் மறுமதிப்பீடு கோரி பின்னர் விண்ணப்பிக்க இயலும்.

**விடைத்தாளின் நகல் கோரி விண்ணப்பிப்போர், அதே பாடத்திற்கு மதிப்பெண் மறுகூட்டலுக்குத் தற்போது விண்ணப்பிக்கக் கூடாது.** விடைத்தாளின் நகல் பெற்ற பிறகு அவர்கள் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்படும்.

<u>விடைத்தாள் நகல் – இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளுதல் :</u>

அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவிக்கும் நாட்களில், விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் தங்களது விடைத்தாளின் நகலினை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்துக் கொள்ள வேண்டும்.

<u>முக்கிய குறிப்பு:-</u>

செப்டம்பர் /அக்டோபர் **2020,** பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வுக்கான மறுகூட்டல் / விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு செல்லும்பொழுது கட்டாயம் முகக்கவசம் அணிந்து, போதிய சமூக இடைவெளியினைக் கடைபிடித்தல் வேண்டும்.

ஒம்./–
இயக்குநர்

<u>இடம் :</u> சென்னை–600 006.
<u>நாள் :</u> 27.10.2020.